# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590


**<u>ஆணை நாள் 10.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 15445/B/2022</u>**

திரு. நாஞ்சில் C. மனோகரன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்
செயற்பொறியாளர்,
நீர்வளத்துறை, பொது அதிகார அமைப்பு
கீழ்பாலாறு வடிநில உபகோட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்-603 001.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் (20.05.2025) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அன்று ஆஜரான பொது தகவல் அலுவலர் திரு.G.மகேந்திரகுமார், உதவி செயற்பொறியாளர், கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் திரு.D.குஜராஜ், உதவி பொறியாளர், நீ.ஆ.து., பாசன பிரிவு, படப்பை அவர்கள் தாம்பரம் வட்டாட்சியருக்கு பெருங்களத்தூர் கிராமம், புல எண்.341/2-இல் ஆக்கிரமணங்கள் குறித்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி நடவடிக்கை எடுத்து புல எண்.341/2 & 279-இல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு அறிவுறுத்தப்பட்டு, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கும்பொருட்டு வட்டாட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டதாக அன்றைய தினம் சமர்ப்பித்தனர். அதன் அடிப்படையில் திரு.ஆர்.ராஜேந்திரன், வட்டாட்சியர், தாம்பரம் அவர்கள் (10.06.2025) இன்று நேரில் ஆஜராகி 02.06.2025 கடிதத்தின் வாயிலாக மனுதாரர் அளித்த மனுவின் தொடர்பாக 341/2 & 279 ஆகிய புல எண்களுக்கு உதவி செயற்பொறியாளர், கீழ்பாலாறு வடிநில உபகோட்டம் அவர்களால் படிவம் 1 & 2 அனுப்பக் கோரப்பட்டது. அதன்படி ந.க.எண்.ஆ5/3729/2024, நாள்.21.05.2025 கடிதத்தின்படி படிவம் 1 & 2-ஆனது திருமதி.ரேகா க/பெ. பெ.ரெங்கையன், திரு. ரமேஷ் த/பெ. பலராமன், திரு.சையத் ரபியா த/பெ. முகமது நசீல் மற்றும் திரு.விஸ்வநாதன் த/பெ. பெ. ஞானமூர்த்தி ஆகியோர் நால்வர்க்கும் வழங்கப்பட்டு, இரண்டு படிவங்களும் உதவி பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, பாசன பிரிவு, படப்பை அவர்களுக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. செயற்பொறியாளர், நீர்வளத்துறை, கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் உதவிப் பொறியாளர்,

நீர்வளத்துறை, கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் ஆக்கிரமிப்பு குறித்து நடவடிக்கை எடுத்து, நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான புகைப்பட ஆதாரத்துடன் அறிக்கையாக தயார்செய்து மனுதாரருக்கு அனுப்பி, அந்த அறிக்கையினை (11.07.2025) அன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15445/B/2022</u>**

1. <u>பொதுத் தகவல் அலுவலர்</u>
   செயற்பொறியாளர்,
   நீர்வளத்துறை,
   கீழ்பாலாறு வடிநில உபகோட்டம்,
   செங்கல்பட்டு மாவட்டம்-603 001.

2. உதவிப் பொறியாளர்,
   நீர்வளத்துறை,
   கீழ்பாலாறு வடிநில உபகோட்டம்,
   செங்கல்பட்டு மாவட்டம்-603 001.

<u>மேல்முறையீட்டாளர்</u>
திரு. நாஞ்சில் C. மனோகரன்,
எண்.11, சாந்தி நகர்,
1-ஆவது குறுக்குத் தெரு,
கௌரிவாக்கம்,
சென்னை-600 073.

Copy to: File. GP PC